# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

********

**முறையீட்டு மனு எண்: 92/2018/பே**
**ஆணை நாள். 14–11–2018.**

**திருமதி. M. சுமதி,**
**த/பெ. T. முனியாச்சாரி,**
**18/52 –A, சன்னதி தெரு,**
**சோளிங்கர் – 631 102**
**வேலூர் மாவட்டம்.**

-- முறையீட்டு மனுதாரர்.

**செயல் அலுவலர்,**
**சோளிங்கர் பேரூராட்சி,**
**வேலூர் மாவட்டம்.**

-- எதிர் மனுதாரர்.

அணை.

வேலூர் மாவட்டம், சோளிங்கர் பேரூராட்சி, சன்னதி தெரு, எண்.18/52–A, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. M. சுமதி, என்பவரது 17.04.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.04.2018ல் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 92/2018 என எண்ணிடப்பட்டது. மேற்படி முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் இறுதி ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் திருமதி. M.சுமதி, தனது முறையீட்டு மனுவில், வேலூர் மாவட்டம், சோளிங்கர் பேரூராட்சி, சன்னதி தெருவில், தனது தாயார் திருமதி.கண்ணம்மாள் அவர்களால் சோளிங்கர் சார்பதிவாளர் அலுவலகத்தில் வீட்டின் முன் பாகம், ஆவண எண்.289/2014, நாள். 30.01.2014ன்படி தனது பெயருக்கு பதிவு செய்யப்பட்டு தனது பொறுப்பில் உள்ளதாகவும், மேற்படி சொத்திற்கு தனது பெயருக்கு புதிய வீட்டு வரி விதிக்க சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு 05.06.2017ல் விண்ணப்பம் செய்ததாகவும், ஆனால் மேற்படி சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலர் தனக்கு வரி விதிப்பினை செய்து தரவில்லை என தெரிவித்து விசாரணைக் கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 10.05.2018 நாளிட்ட அழைப்பாணை மூலம் மேற்படி பொருள் தொடர்பாக இரு தரப்பு விளக்கங்களையும் பதிவு செய்ய ஏதுவாக முறையீட்டு மனுதாரர் மற்றும் சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களை 28.06.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

28.06.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திருமதி.M.சுமதி, தனது வாக்குமூலத்தில், முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள சோளிங்கர் சன்னதி தெருவில் உள்ள பழைய கதவு எண்.52எ/18 உள்ள விலாசத்தில் உள்ள வீட்டினை தனது தாயார் வாங்கியதாகவும், தனக்கு இரு அண்ணன் மற்றும் ஒரு தம்பி ஆகியோர் உள்ளதாகவும், தான் 13 ஆண்டு காலம் காஞ்சிபுரத்தில் இருந்ததாகவும், தான் தனது தாயார் வீட்டிற்கு வந்தபோது தனது அண்ணன் இருவரும் வெளியில் வீடு எடுத்து தங்கியிருந்ததாகவும், தனது தம்பி மட்டும் தனது தாயார் வீட்டில் குடியிருந்ததாகவும் தெரிவித்துள்ளார். தனது தந்தைக்கு உடல் நலமின்றி இருந்த காலத்தில் தனது சகோதரர்கள் எவரும் கவனிக்கவில்லை எனவும் அவர் காலமானபிறகும் தான் தனது தாயாரின் வீட்டில் இருந்ததாகவும், தனது தாயார் உடல் நலமின்றி இருந்தபோதும் அவரை தனது சகோதரர்கள் யாரும் கவனிக்கவில்லையெனவும், தான் மட்டுமே அவரை கவனித்துக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். தனது தம்பிக்கு தனது தாயார் மேற்படி வீட்டின் பின் பகுதியினை செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி வைத்ததாகவும், அவரின் நடவடிக்கை சரியில்லாத நிலையில் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தினை தனது தாயார் ரத்து செய்து, தனக்கு உயில் ஆவணம் மூலம் எழுதி வைத்ததாகவும், ஏற்கனவே வீட்டின் முன் பகுதியை தனது தாயார் தனது பெயருக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி வைத்து விட்டதாகவும், இதன் அடிப்படையில் மேற்படி வீடு முழுவதும் தனக்கு பாத்தியப்பட்டது எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். தனக்கு தன் தாயாரால் எழுதிக் கொடுக்கப்பட்ட உயிலின் அடிப்படையிலும், தனது தம்பிக்கு எழுதிக் கொடுத்த பின் பகுதி தான செட்டில் மெண்ட்டை ரத்து செய்தும், தனது தாயார் உயிருடன் உள்ள நிலையில் தனது தம்பி மேற்படி வீட்டின் பின்பகுதியினை, தனது மனைவி திருமதி. வரலட்சுமி என்பவரின் பெயரில் எழுதி வைத்த ஆவணத்தின் அடிப்படையில் பேரூராட்சி மூலம் அவரின் பெயருக்கு சொத்து வரி பெயர் மாற்றம் செய்ததாகவும், தனது தாயார் 2015 டிசம்பர் மாதம் காலமானதைத் தொடர்ந்து தனது வழக்கறிஞர் 07.08.2013ல் மேற்படி திருமதி. வரலட்சுமி பெயருக்கு சொத்து வரி விதிப்பு செய்யக்கூடாது என செயல் அலுவலருக்கு மறுப்புக் கடிதம் கொடுத்துள்ளதாகவும், இது சம்பந்தமாக தனது தம்பியின் மனைவியால் சோளிங்கர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளதாகவும், தனது தம்பியின் மனைவி 09.04.2014ல் சோளிங்கர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதாகவும், இது தவிர வேறு வழக்குகள் எதுவும் நிலுவையில் இல்லை எனவும், தான் செயல் அலுவலரிடம் பிரச்சினை இல்லாத தனது பகுதி சார்ந்த வீட்டின் முன் பகுதிக்கு மட்டுமே புதிய சொத்து வரி விதிப்பு கோரியுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் தனது தாயார் திருமதி கண்ணம்மாள் என்வரால் தனது தம்பியின் பெயருக்கு 25.09.2009ல் எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் 16.12.2010ல் மேற்படி தான செட்டில்மெண்ட் ரத்து செய்யப்பட்ட மற்றும் 01.02.2013ல் தனது பெயருக்கு பதிவு செய்த தான பத்திர நகல்களை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

28.06.2018 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகாத சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலரை, மேற்படி பொருள் தொடர்பாக தனது விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 25.09.2018 அன்று ஆஜராகத் தெரிவித்து 19.07.2018 நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

25.09.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில், தான் சோளிங்கர் பேரூராட்சியில் செயல் அலுவலராக கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர்தான் பணியில் சேர்ந்ததாகவும், முறையீட்டு மனுதாரரின் முறையீடு தொடர்பாக ஆய்வு மேற்கொண்டும், நீதிமன்ற வழக்கு எண். O.S.No. 37/2014 தொடர்பான விவரங்கள் குறித்து முறையீட்டு மனுதாரிடம் விசாரணை மேற்கொண்டும் தனது முழுமையான அறிக்கையினை ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிப்பதாக தெரிவித்தார்.

சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 12.10.2018 நாளிட்ட கடிதத்தில் மேற்படி பொருள் தொடர்பாக, சோளிங்கர் பேரூராட்சி, வார்டு எண்.12க்குட்பட்ட, சன்னதி தெருவில் கதவு எண்.18/52A, ல் வசிக்கும் திருமதி. சுமதி, த/பெ திரு (லேட்) முனியாச்சாரி மற்றும் அவரது தம்பி திரு.சேகர் இவர்கள் இருவரும் தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ளபடி கட்டிடம் கட்டியுள்ளதால், திருமதி.சுமதி என்பவருக்கு புதிய வரி விதிப்பு செய்யலாம் எனவும் அதன்படி வரி விதிப்பு எண். 8980 என விதிக்கப்பட்டு, 2018–19 அக்டோபர்–மார்ச் முடிய ரூ.699/–க்கு வரி விதிப்பு செய்து தொகை பெறப்பட்டமைக்கான ரசீதும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் தனது 25.10.2018 நாளிட்ட கடிதத்தில் சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது முறையீட்டு மனு தொடர்பாக 11.10.2018ல் ஆய்வு மேற்கொண்டு தனது பெயருக்கு 16.10.2018ல் வரி விதிப்பு எண். 8980க்கு 6 மாத வீட்டு வரி ரூ699/–க்கு விதிக்கப்பட்டதாகவும் தெரிவித்து தனது கோரிக்கை சுமுகமாக முடிந்து விட்டதாகவும் தெரிவித்து இதன் பொருட்டு தனது நன்றியினை இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துள்ளார்.

எனவே இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, வாக்குமூலம் மற்றும் சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க கடிதம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு இப்பொருள் தொடர்பாக சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவரால் முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள பகுதிக்கு புதிய வீட்டு வரி விதிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மனுதாரரது கோரிக்கை நிறைவேற்றப்பட்டமையால் இம்முறையீட்டு மனு தொடர்பான தொடர் நடவடிக்கை கைவிடப்படலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–**

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளர். 30/11/2018

23/11/18

பெறுநர்

1.திருமதி. ஆ. சுமதி,
த/பெ (லேட்) கூ. முனியாச்சாரி,
18/52 –ஏ, சன்னதி தெரு,
சோளிங்கர் – 631 102
வேலூர் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
சோளிங்கர் பேரூராடசி,
வேலூர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
வேலூர் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
வேலூர்.